**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**
**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**
**<u>MCOP . No.55/2025</u>**

**<u>நாள் : 30.03.2026</u>**

**ம.சா.** 1 (மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.லாவாண்யா | மாவட்டம் | : | திருப்பத்தூர் |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு.கிருபாகரன் | வயது | : | 24 |
| ஊர் | : | ஆலந்தூர் | தொழில் | : | |
| வட்டம் | : | திருப்பத்தூர் | தேசியம் | : | இந்தியன் |

நான் இந்த வழக்கில்ஆவேன். இந்த வழக்கிற்கான நிரூபண வாக்குமூலம் எனக்காக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

1. முதல் தகவல் அறிக்கை நகல் – ம.சா.ஆ.1

2. விபத்து பதிவேடு அறிக்கை நகல் – ம.சா.ஆ.2

3. அரசு பேருந்தின் பதிவு புத்தகம் நகல் – ம.சா.ஆ.3

4. அரசு பேருந்து ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் நகல் –ம.சா.ஆ.4

5. மருத்துவ பில்கள் அசல் ரூ.3247/– ம.சா.ஆ.5

6. மனுதாரரின் மருத்துவ அறிக்கைகள் அசல் – ம.சா.ஆ.6

7. மனுதாரரின் ஆதார் அட்டை நகல் – ம.சா.ஆ.7

8. மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் நகல் – ம.சா.ஆ.8

மனுப்படி தீர்ப்பாக கோருகிறேன்.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

நான் B.Tech Computer science படித்துள்ளேன். 2023ஆம் வருடத்தில் படிப்பை முடித்தேன். நான் பெங்களூரில் MATH கம்பெனியில் Data Analyst ஆக பணிபுரிந்து வருகிறேன். அவ்வாறு பணிபுரிந்ததற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது மாத சம்பளம் ரூ.35,000/– என்பதை காட்டும் ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பயணித்த பேருந்தின் பதிவு எண் ஞாபகமில்லை, அதன் டிக்கெட் என்வசம் உள்ளது. அந்த டிக்கெட்டை தாக்கல் செயயவில்லை என்றால் சரிதான். சாட்சி தனது மொபைல் போனில் உள்ள ஆன்லைன் டிக்கெட்டை ஆஜர் செய்கிறார். அதன் **உண்மை நகல் நீ.ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் விபத்திற்கு பின்னிட்டு வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தேன். அங்கிருந்து சென்னையில் உள்ள செயிண்ட் தாமஸ் மருத்துவமனைக்கு சென்று மேல்சிகிச்சைக்கு சேர்ந்தேன். வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை மட்டுமே எடுத்துக்கொண்டேன். சென்னையில் உள்ள செயிண்ட் தாமஸ் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்ததை காட்டும் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். அது ஏற்கனவே ம.சா.ஆ.6ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள மருததுவ பில்கள் வழக்கிற்காகவேண்டி தயாரிக்கப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல. விபத்து நடந்த நேரம் விடியற்காலை 4.00 மணி ஆகும். நான் பேருந்தின் 1வது இருக்கையில் Lower birth–ல் பயணித்தேன். அதிகாலை என்பதால் நான் அசந்து தூங்கி கொண்டிருந்தேன் என்றால் சரிதான். எனவே யாருடைய அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. SETC பேருந்தின் ஓட்டுநர் தூக்க கலக்கத்தில் இருந்தார், டீ குடிக்க வண்டியை நிறுத்தினார்.

ஆனால் வண்டியை நிறுத்திவிட்டு டீ கூட குடிக்கவில்லை தூங்கிக்கொண்டேதான் இருந்தார். அந்த சமயத்தில் நான் தூங்கவில்லை. மேற்படி அரசு பேருநதுக்கு பின்னால் வந்த ஆம்னி வேன் வலதுபக்கத்தில் ஓவர்டேக் செய்த நிலையில் அரசு பேருந்தின் ஓட்டுநர் திடீரென பிரேக் போட்டதால்தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. விபத்தானது ஆம்னிவேனின் ஓட்டுநரால் ஏற்பட்டதால் ஆம்னிவேனின் ஓட்டுநர்தான் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. ஆம்னிவேனின் பதிவு எண் NL 01 B 7677 என்றால் எனக்கு அது ஞாபகமில்லை. ஆம்னிவேனின் காப்பீட்டு நிறுவனமும், உரிமையாளருமே இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். எதிர்மனுதாரரை பொருத்து வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி(FAC),
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.